*Intervention 2008, Volume 6, Number 1, Page 92 - 94*

# Summaries in Tamil

**சமூகம்சார் உளசமூகத்திட்டங்களை மதிப்பிடுவதற்கான பரிந்துரைப்புகள்**

இந்தப்பிரசுரமானது ஏப்பிரல் 2007இல் NATOவால் நடாத்தப்பட்ட உயர்தர ஆராய்ச்சிப் பயிற்சிப்பட்டறையில், ஆயுத முரண்பாடு மற்றும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் நடைபெறும் சமூகம்சார் உளசமூக திட்டங்களை மதிப்பிடுவதற்காக முன்வைக்கப்பட்ட, 24 பரிந்துரைப்புகள்பற்றி விபரிக்கின்றது. மதிப்பீட்டாளர்களும் திட்டங்களை அளிப்பவர்ளும் தங்களுடைய வேலையை வடிவமைக்கும்பொழுதும் பணியாற்றும்பொழுதும் எவ்வாறு விழுமியங்கள், ஆதாரங்கள் மற்றும் தங்கள் அனுபவங்களை எவ்வாறு தொகுக்க வேண்டுமென ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையினை சாராம்சப்படுத்துகின்றது.

---

**அவசரகால நிலைகளில் உளசமூக செயற்திட்டங்களின் மதிப்பீடுகளிற்கான UNICEF ஆல் ஏற்படுத்தப்பட்ட வழிகாட்டல் குறிப்புகள் தொடர்பாக எழும் விடையங்கள்**

UNICEF நிறுவன ஊழியர்களுக்காக 2006ம் ஆண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீடு தொடர்பான வழிகாட்டல் குறிப்புகளின் உருவாக்கம் பற்றியதே இக் கட்டுரை ஆகும். வழிகாட்டல் குறிப்புகளின் உருவமைப்பில் கைக்கொள்ளப்பட்ட கருத்துப்பரிமாறல் முறை பற்றியும், இது எவ்வாறு களநிலைமைகளை வெளிக்கொண்டுவந்தது என்பதனையும் இக் கட்டுரை கலந்துரையாடுகிறது. மேயில்மன் ஸ்கூல் ஒவ் பப்லிக் ஹெல்த் (Mailman School of Public Heath) யை அடிப்படையாகக்கொண்ட மீழ்பார்வைதொடர்பாக, மதிப்பீட்டு வடிவமைப்புகள், அணுகுமுறைகள் பற்றிய பரந்த கண்டுபிடிப்புகள் அலசப்படுகிறது. உளசமூக திட்டங்களை அவற்றின் வெளிப்பாடு, வெளியீடுகள், தாக்க மட்டம் என்பவற்றின் குறிகாட்டிகளின் அடிப்படையில் விளங்கிக்கொள்வதை இக் கட்டுரை முன்நிலைப்படுத்துகிறது. சிக்கலான அவசரகால நிலைமைகளில் எண்ணிக்கை சார், பண்புசார் அணுகுமுறைகளைக் கைக்கொள்வதில் உள்ள சவால்கள் இரண்டாவதாகும். ஆராட்சியாக மேற்கொள்ளப்படும் மதிப்பீடு மற்றும் உண்மை நிலையில் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு என்பவற்களுக்கு இடையிலான முரண்பாடுகள் மூன்றாவதாக ஆராயப்படுகிறது.

**முக்கிய சொற்பதங்கள்:** மதிப்பீடு, உளசமூக செயற்திட்டம், அவசர நிலை

---

**உளசமூக செயற்திட்டங்களின் மதிப்பீட்டுக்கான குறிகாட்டிகளை உருவாக்குதல்: ஆக்கபூர்வச் சவால்களுக்கும் ஆய்வின் சட்டதிட்டங்களுக்கும் இடையிலான முரண்பாடு**

ஓர் உளசமூக செயற்திட்டத்தில் பல பங்காளிகள் அக்கறை கொண்டிருப்பார்கள். செயற்திட்டப் பணியாளர்கள், முகாமையாளர்கள், நிதி வழங்குவோர், அதிகாரிகள், பயனாளிகள் மற்றும் சமூகம் போன்றோரும் இதில் அடங்கலாம். சில சமயங்களில் இவர்களின் அக்கறைகளில்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

வித்தியாசங்கள் இருந்தாலும், இவற்றைத் தெளிவுபடுத்துவது சமநிலையைப் பேணுவதற்கு உதவும். மதிப்பீடு என்பது, அடிப்படையில் ஓர் செயற்திட்டத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் கருவியாகும். செயற்திட்டம் தனது நோக்கத்தை அடைந்துவிட்டது என்பதை உறுதிப்படுத்தக்கூடிய, அளவிடக்கூடிய வெளிப்பாடுகளை ஓர் மதிப்பீடு இனம்காணவேண்டும். சிக்கலான விடையம் என்னவெனில், மதிப்பீட்டுக் குறிகாட்டிகள் பல சர்வதேச வகையீடுகளைத் திருப்தி செய்வதுடன் குறிப்பிட்ட செயற்திட்டத்தின் உள்ளடக்கத்தையும், தரவுகளை சேகரிக்கும் முறைகளையும் பிரதிபலிக்க வேண்டும் என்பதாகும்.

**முக்கிய சொற்பதங்கள்:** மதிப்பீடு, வகையீடு, குறிகாட்டிகள

---

**ஆயுத முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட சிறுவர், இளைஞர்களின் மனநலன் தொடர்பான இடையீடுகளை ஆதாரப்படுத்தல்**

ஆயுத முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட சிறுவர், இளைஞர்களுக்கான மனநலன் தொடர்பான இடையீடுகளின் பயன்பாடு குறித்து இதுவரை ஆய்வுகள் மூலம் அறியப்பட்ட விடையங்களை இக்கட்டுரை கலந்துரையாடுகிறது. இத் துறையை செல்வாக்கு செலுத்திவரும் இரு முக்கிய பரிமாணங்கள் இங்கு தரப்பட்டுள்ளன: உளசமூக அணுகுமுறை மற்றும் குணப்படுத்தல் மற்றும் மனநலச் சிகிச்சை அணுகுமுறை என்பவையாகும். இரு அணுகுமுறைகளின் கணிப்பீடு, திட்டமிடல், அணுகுமுறையின் கண்காணிப்பும் மதிப்பீடும் போன்ற விடையங்கள் மீழ் பார்க்கப்படுகின்றன. ஆயுத முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட சிறுவர், இளைஞர்களின் மனநலன் தொடர்பான இடையீடுகளை ஆதாரப்படுத்தலிற்கு தேவையான எதிர்கால ஆராட்சிகளைப்பற்றியும் கூறப்பட்டுள்ளது.

**முக்கியமான சொற்பதங்கள்:** சிறுவர், மனநலன், ஆயுத முரண்பாடு, மனநலன் சார் இடையீடுகள், யுகண்டா

---

**ஆயுத முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உளசமூக திட்டங்களை மதிபிடலிலுள்ள சில விஞ்ஞான சார்பற்ற தடைகள்.- ஒரு களப்பணியாளியின் நோக்கில்**

பரந்த களஅனுபவத்தை அடிப்படையாகக்கொண்டு எழுத்தாளர், சேவைகளை பெறுபவர்களின் மதிப்பீடுகளுக்கெதிரான ஆர்வமற்ற தன்மைபற்றிய சம்பவக்கற்கைகளை அளிக்கை செய்கின்றார். வெளி மதிப்பீட்டாளர்களால் முடிக்கிவிடப்படும் அல்லது மதிப்பீட்டு செயல்முறையில் வெளித்தெரியும் உளவியல் செயல்முறைகள் களப்பணியாளர்களில் ஏற்படுத்தும் ஒரு இலகுவற்ற தன்மைபற்றி விபரிக்கப்படுகின்றது. சில மதிப்பீட்டு முறைகளுக்கு கிடைத்த கலாச்சார அங்கீகாரம் பற்றி கலந்துரையாடப்பட்டது. மதிப்பீடுகளை வடிவமைப்போர், மதிப்பீட்டு அறிக்கைகளைப் பிரசுரிப்போர், அல்லது மதிப்பிட்டுத் தரவுகளை அடிப்படையாகக்கொண்ட ஆய்வுகள் சம்பந்தமான ஒழுக்காற்றுக் கோவைகள் பற்றிய கேள்வி, மற்றும் சமூகப்பொறுப்பு என்பன அளிக்கை செய்யப்பட்டன. ஆராய்ச்சிக்கும் மதிப்பீட்டிற்குமான உறவுபற்றிக் கையாளப்பட்டது.

**முக்கிய சொற்பதங்கள்:** கலாச்சார அங்கீகாரம், மதிப்பீடு, ஒழுக்கக்கோவை



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

**சமூகம்சார் உளசமூக திட்டங்களை மதிப்பிடல்: ஏன்? எதற்காக? எவ்வாறு?**

உளசமூகத் திட்டங்களின் மதிப்பீடு பல்வேறு காரணங்களுக்காக நடாத்தப்படலாம். என்ன மதிப்பிடப்பட்டது, என்ன வகையீடுகள் பிரயோகிக்கப்பட்டன, என்ன முறைகள் பிரயோகிக்கப்பட்டன என்பவற்றை, காரணங்களின் தன்மையே தீர்மானிக்கும். அனுபவங்களினூடாக கற்றுக்கொள்ளவும் நிபுணத்துவத்தை வளர்த்துக்கொள்ளும் முகமாகவும் இந்தப்பிரசுரத்தில் மதிப்பீட்டிற்கு கூடுதல் கவனம் கொடுக்கப்பட்டுள்ளது. சில மதிப்பீட்டு வகைகள் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்தோடு படிப்படியான திட்டம் விபரிக்கப்பட்டுள்ளது.

**முக்கிய சொற்பதங்கள்:** மதிப்பீட்டு வகையீடுகள், தாக்கம், குறிகாட்டிகள், பயன்படுதன்மை



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.